**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO.111/ 2024**

Deposition of PW - 4 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 07.07.2026 in accordant with provisions of XLIV of 1989.

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர் திரு.ரஜினிகாந்த் | Age | : |
| Father's Name | : | Village | : |
| Calling | : | Taluk | : |

**முதல் விசாரணை**

நான் கரூர் ஜி.சி மருத்துவமனையில் எலும்பு முறிவு சிறப்பு மருத்துவராக பணிபுரிந்து வருகின்றேன். தண்டபாணி, வயது 28, த/பெ.சின்னதம்பி, கிருஷ்ணன்கோவில் தெரு, நெரூர், கரூர் மாவட்டம் என்பவர் 02.10.2022-ம் தேதி சாலை விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக எங்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். அவருக்கு 05.10.2022-ம் தேதி அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அவர் அனுமதிக்கப்பட்டபோது வலது தலை பகுதியில் காயம் காணப்பட்டது. அவரது வலது முழங்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. இடது கணுக்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அவருக்கு வலது முட்டியில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு திருகாணி பொருத்தப்பட்டது. இடது கணுக்காலிலும் அறுவை சிகிச்சை மூலம் திருகாணி பொருத்தப்பட்டது. அவர் 17.06.2026-ம் தேதி என்னிடம் ஊனச்சான்று பெறுவதற்காக வந்தார். அவருக்கு நுண்கதிர்படம் எடுக்கப்பட்டது. அவரது **வலது கால் நுண்கதிர்படம் ம.சா.ஆ.15** ஆகும். **இடது கணுக்கால் நுண்கதிர்படம் ம.சா.ஆ.16** ஆகும். அவருக்கு வலது முட்டி பகுதியிலும், இடது கணுக்கால் பகுதியிலும் அசையும் தன்மையானது குறைந்து காணப்படுகிறது. அவரது தசை சக்தியானது வழக்கத்தைவிட சற்று குறைவாக காணப்பட்டது. அவரால் தரையில்அமர்ந்து எழுந்து கொள்வதற்கும், படியில் ஏறுவதற்கும், நீண்ட நேரம் நிற்பதற்கும் சிரமம் ஏற்படும். அவருக்கு பொருத்தப்பட்ட திருகாணியை எலும்புகள் நல்ல முறையில் கூடிய பின்பு மீண்டும் அறுவை சிகிச்சை மூலம் நீக்கவேண்டும். அதற்கு சுமார் ரூ. 75 ஆயிரம் செலவாகும்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வரவில்லை. மனுதாரர் வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மனுதாரருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை குறித்த ஆவணங்களை

நான் கொண்டு வரவில்லை. மனுதாரர் சிகிச்சைக்கு சேர்ந்தபோது அவரது வயது 28 ஆகும். நுண்கதிர் படத்தில் அவரது வயது 34 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை விடுவிப்பு அறிக்கையில் அவரை மீண்டும் சிகிச்சைக்கு எப்போது வரவேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டு சிகிச்சை விடுவிப்பு அறிக்கையில் இல்லை.

மனுதாரர் என்ன வேலை செய்கிறார் என்று தெரியாது. என்ன வகையான பரிசோதனைகள் மனுதாரருக்கு மேற்கொள்ளப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள ஊனத்தின் தன்மை குறித்து எவ்வளவு நேரம் நான் பரிசோதனை மேற்கொண்டேன் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. மனுதாரருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவு கூடிவிட்டது. அவ்வாறு எலும்பு கூடியதில் குறைபாடு எதுவும் இல்லை. அரசு நியமித்துள்ள மருத்துவ குழுவானது பொதுவாக பரிசோதனை செய்துதான் ஊனத்தின் தன்மையை சொல்வார்கள் என்றால் சரிதான். கால்கள் மடக்கும் திறன் குறித்து பரிசோதிப்பதற்கு கருவி உள்ளது.

மனுதாரருக்கு பொருத்தப்பட்டுள்ள திருகாணியை கட்டாயம் நீக்கவேண்டும் என்று தேவையில்லை என்றால் அவ்வாறு சொல்ல முடியாது. மனுதாரர் எங்கள் மருத்துவமனையில் தொடர் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்பு மனுதாரர் பூரண குணமடைந்துவிட்டார் என்றால் அது பற்றி என்னால் சொல்ல முடியாது. நான் மனுதாரர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |